# அயகம பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 26 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 27 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நொவம்பர் 25 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் பொருட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 578,037 பெறுமதி சேர் வரி சம்பந்தமாக எதுவித குறிப்புக்களும் குறித்த பேரேட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 15,000,000 மதிப்பீடு செய்யப்பட்டு வருவாயில் கணக்கிலிடப்பட்ட போதும், முன்னைய ஆண்டின்

நீதிமன்றத் தண்டப்பணமாகிய ரூபா 678,000 மற்றும் மீளாய்வாண்டின் ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான உள்ளவாறான வருவாய் ரூபா 332,417 அளவிலான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டில் கூடுதலாகக் கணக்கிலிடப்பட்ட வருவாயாகிய ரூபா 822,000 நாட் குறிப்புக்கள் மூலம் திரண்ட நிதியக் கணக்கில் சீராக்கல் செய்யப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டு ஒக்டோபர் முடிவில் இனங்காணப்பட்ட பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருவாய் ரூபா 3,251,530 ஆகும். கணக்கின் பிரகாரமான மீதி ரூபா 182,526 ஆகும். வித்தியாசம் ரூபா 3,069,004 ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 4,888,540 பின்னினைப்பு ரூபா 6,669,184 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ரூபா 3,596,453 வித்தியாசம் ஏற்பட்டது. மீளாய்வாண்டின் போது விடுவிக்கப்பட்ட ரூபா 3,133,062 பிணை வைப்பு ரூபா 4,829,226 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ஏற்பட்ட வித்தியாசம் ரூபா 1,696,224 ஆகும்.

(உ) மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணம் ரூபா 292,840 ஆகும். ஆனால் கணக்கின் பிரகாரம் இது ரூபா 6,971,440 என்பதால் ரூபா 6,678,599 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) உள்ளூர்க்கடன் அபிவிருத்தி நிதியத்தால் அயகம வர்த்தகக் கூட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு 2012 பெப்ரவரி 01 ஆந் திகதியன்று பெறப்பட்ட ரூபா 1,860,000 பொறுப்பாகக் கணக்கிலிடப்பட்டது. மூலதன உதவித் தலைப்பின் கீழ் வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(எ) பொதுச் சந்தைக் கூட்டுத்தொகுதியின் இரண்டாவது மாடியானது 3 ஆம் கடையும் முதலாவது மாடியின் 2 ஆம் கடையும் தொடர்பான ரூபா 704,667 வருவாயானது முற்பணத்தின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஏ) சபைக்குச் சொந்தமான ரூபா 7,145,230 பெறுமதியான 5 வாகனங்களும் 23 இயந்திர சாதனங்களும் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 298,489

ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,402,257 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

கீழே குறிப்பிடப்பட்ட நிதிக் கட்டுப்பாட்டுக் குறைவு.்.குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் செலவினத் தலைப்பு மற்றும் 28 உப செலவினத் தலைப்புக்குரிய ரூபா 583,000 நிதியேற்பாடு செலவிடப்படாது எஞ்சியிருந்தது. நாற்பது செலவின விடயங்களுக்குரிய ரூபா 3,775,626.13 எஞ்சியிருந்தது.

(ஆ) 2000 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 25 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 1,627,962 முற்பணமானது கணக்காய்வுத் தினமான 2012 நொவம்பர் 14 வரை தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை இன்றி இருந்தது.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் தோற்றுவாய் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 370 | 430 | 140 |
| (ii) | குத்தகை வாடகை | 2,025 | 1,900 | 125 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 755 | 450 | 305 |
| (iv) | பிற வருவாய் | 5,627 | 4,057 | 1,571 |

#### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 1,010,416 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,251,530 |

### 2.3.3 மீன் கடைக் குத்தகை

அயகம வாரச் சந்தை இலக்கம் 1 மீன் கடையை 2012 ஆம் ஆண்டிற்கெனத் குத்தகைக்குப் பெற்ற கேள்வியைக் கோரியவர் ஜனவரி முதல் மார்ச் வரை 3 மாதங்களுக்கு மாத்திரமே கடையை நடாத்தியிருந்தனர்.

குறித்த கேள்வியை இரத்துச் செய்து அடுத்துள்ள அதிகூடிய கேள்வியாகிய ரூபா 126,260 க்குரியவருக்கு அதனை வழங்காமையால் சபைக்கு ரூபா 63,130 வருவாய் இழப்பு ஏற்பட்டது.

### 2.3.4 பிற வருவாய்

அயகம நகர ஊடக நிலையத்திற்கான குத்தகையாக மீளாய்வாண்டு முடிவில் ரூபா 42,761 அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 2.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்

குறித்த ஆண்டில் அயகம வாரச் சந்தையின் இலக்கம் 01 மீன்கடை அயகம வாரச் சந்தை கோழி இறைச்சிக் கடை மற்றும் அயாகம நகர மின் விற்பனை செய்யும் இடம் எனபன எதுவித வருவாயுமின்றி மூடிவைக்கபட்டிருந்தன.

## 2.5 செயற்பாட்டு விணைத்திறமையின்மை

(அ) சபைக்குச் சொந்தமான காணி கட்டிடங்கள் அடங்கலாக சகல சொத்துக்களும் சம்பந்தமாகக் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) அயகம பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் செயற்படும் 10 நீர்ச் செயற்திட்டங்களுக்கு 2012 நொவம்பர் 11 ஆந் திகதியளவில் பராமரிபுக்காக ரூபா 354,519 செலவிடப்பட்டிருந்தது. 2012 நொவம்பர் 11 வரை விலைப்பயிலிடப்பட்ட வருவாய் ரூபா 108,100 ஆகும்.

இதனால் நடப்பாண்டின் போது நபையின் நிதியில் மேலதிகமாக ஏற்பட்ட ஆகு செலவு ரூபா 246,419 ஆகும்.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

(இ) சொத்துப் பாவனை

(ஈ) வருவாய் நிர்வாகம்